DR.RAJESHWARI'S
Skin Care & Hair Restoration Centre
Book for Unlimited Hair with HAIR TRANSPLANT
PRP HAIR - REGROWTH
Book Now
73373 11188
Door No.15, First Floor, Velachery Main Road, Opposite to Phoenix Mall, Chennai - 600 042
Email : info.drrschrc@gmail.com
Contact
7337311188 / 044-42152111

EXPRESS EV VELACHERY
Neighbourhood Newspaper - Weekly
Free Circulation

நாவில் நடனமாடும் சுவைக்கு
கங்கா ஸ்வீட்ஸ்
GANGA SWEETS
PURE GHEE SWEETS
Contact
4264 5911 / 2615 4635

VOL - 3 ISSUE - 44 Editorial : 044-42077328 / 7305837388 email : expressvelachery@gmail.com

# Chennai: Velachery bus terminus to be shifted near railway station...

**CHENNAI:** After a gap of nearly 10 years, Metropolitan Transport Corporation (MTC), Chennai has finally taken an initiative to shift the Velachery bus terminus to a new location near the local railway station.

At present, the terminus is functioning from a small piece of land near Vijaya nagaram junction. But it is in shambles, and bus movement has become difficult ever since the government started constructing a flyover at this stretch in 2016. There is no space even for passengers to wait until their bus arrives.

Since then, residents have appealed to shift the terminus to a new location. The MTC tried to move it near Velachery railway station in 2018. But the attempt could not bear fruit as talks between various government Agencies failed.



Against this backdrop, the transport corporation is trying to shift operations to another six- acre land near the station (abutting Velachery Bypass Road).

"The land has been allotted to us. We are taking steps to pay for the land in instalments," said A Anbu Abraham, managing director of MTC. The land alone might roughly cost 38 crore.

S Kumararaja, a resident-activist from Velachery, said that MTC said, "If this becomes a reality, not only MTC buses but mofussil services can also be operated from this location. Currently, government mofussil buses to Villupuram, Pudhucherry and Tiruvannamalai are operated from Adyar. Instead of parking them along congeste Indira Nagar roads, operations can be smoother from the proposed site in Velachery".

This project, which was launched 10 years ago during the DMK regime, was left in the lurch. Only now, some steps are taken. However, MTC might not have adequate funds to construct a new bus stand or workshop, it can seek financial assistance from Chennai Metropolitan Development Authority (CMDA), he opined.

The CMDA, the nodal planning agency, constructed two terminuses at Koyambedu and Kilambakkam.

# விஜயநகர் நலவாழ்வு சங்கத்தின் சார்பாக நடைபெற்ற குடியரசு தின விழா சிறப்பு நிகழ்ச்சி...



நமது வேளச்சேரி விஜயநகர் நலவாழ்வு சங்கத்தின் சார்பாக குடியரசு தின விழா ஆண்டு தோறும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதே போல் இந்த ஆண்டும் சங்கத்தின் சார்பாக 73வது குடியரசு தின விழா, விஜயநகர் 5வது பிரதான சாலையில், மிகச்சிறப்பாக நடைபெற்றது. நலவாழ்வு சங்கத் தலைவர் திரு. பட்டாபிராமன் அவர்கள் தேசிய கொடியேற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். குடியரசு தினத்ததை முன்னிட்டு கோலப்போட்டி நடைபெற்றது. இக்கோலப்போட்டியில் கலந்துக் கொண்ட பெண்கள் அனைவரும் அவர்களுடைய திறமைகளை வெளிப்படுத்தினர். அதனை தொடர்ந்து கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது.









முதல் பரிசு திருமதி. சுசித்ரா குணசேகரன் அவர்களுக்கும் இரண்டாவது பரிசு திருமதி. கீதா ஸ்ரீராம் அவர்களுக்கும் மூன்றாவது



பரிசு திருமதி. அகிலா மற்றும் திருமதி. சங்கீதா அவர்களுக்கும் வழங்கப்பட்டது. பின்பு ஆறுதல் பரிசு திருமதி. சுமத்ரா கிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இறுதியில் தேசிய கீதம் பாடி நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நிறைவு பெற்றது. நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டு விழாவை சிறப்பித்த அனைவருக்கும் சங்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.



# CLASSIFIED

**TUITION CENTRE**
@ Velachery
**Baby Nagar**
*For Students Till 9th Grade of Any Syllabus*
*Contact*
**909 494 7285**

---

**HONEY BEE MUSIC ACADEMY**
Keyboard, Flute Vocal, Singing Chess
*CONTACT*
**9840960638**

---

**SERVICES**
Plumbing, Electrical & CCTV Camara Fixing works
Contact P. Balaji
**9677409529**
**9962242015**

---

**Spoken English Class**
ஆங்கிலம் கற்க ஆசையா?
*Contact*
**9940354513**

---

**INCOME TAX / GST RETURNS, ROC ANNUAL COMPLIANCE / COMPANY INCORP / PF-ESIC eTDS / TRADEMARK REGN / DSC**
ASHARAJ BUSINESS CONSULTANTS
CMA.T.RAJKUMAR JAIN
**99401 11431**
Email:cmarajkumar@gmail.com

---

**SERVICES**
**Plumbing works**
Contact
Govindaswamy
**87544 09752**

---

**CONSULTANT CATERING HOSPITALITY SERVICE**
**NFC**
NIMS FOOD CONSULTANT
E. KAMESH KUMAR IHM-MBA
Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117
Adviser:K.VIJAYA KANCHANA
MSC Food & Nutrition.
email:Nutritionnfc@gmail.com
**Mobile:9790 902400**
email:Consultantnfc@gmail.com

---

**Butter Flies**
Beauty Parlour & Beauty Training Institute
(Recognised by Tamilnadu Government)
**Ladies & Kids Only**
Consultant: Beauty tip & women empowerment (adviser)
No:1, MG NAGAR, ATHANUR - 603 202
binduinno@gmail.com
**80560 87391**
**81247 02731**

---

**SHARAN TRAVELS**
All kinds of Tourist vehicle available here
**Drivers Available**
Contact V. Marimuthu
**9840508030**

---

**RENTAL**
LAND BUYING, SELLING
All Kind of Building Repair Works Undertaken
Contact B. Rajendran
**90809 94500**

---

**WANTED - LADIES TAILOR**
**PRASUDRA** *Boutique*
Salary Rs.15000/-
*Only Ladies*
Working time 10.00am to 5.00pm / Sunday holiday
No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY
CONTACT : PREMALATHA.G
**4435504719 / 8870393999**

---

**COMPUTER** *SERVICES*
Laptop, Peripherals through Installation, Sales, Services, Chiplevel, Virus Removal, Networking Solutions to all Hardware & Software
*Contact*
**9841823435**
**9841823436**

---

**YOURS DETECTIVE AGENCY**
துப்பறியும் நிறுவனம்
PRASANNA KUMARI. R
*(LADY DETECTIVE)*
HEAD OF INTELIGENTS
*No:27/D, Shivas Sundaram Flats, Nattar Street, Velachery, chennai - 42.*
*Contact*
**90945 55522**

---

**YOURS FAMILY SALON**
*BRIDAL STUDIO*
*Sushmitha*
MAKEOVER ARTIST
*Contact*
**96770 97907**
**98405 91115**

---

**NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY**
Online Class for Women and Kids
*FOR ALL AGE CATEGORIES*
*CONTACT*
**89391 53560**

---

**LIBRARY FOR CHILDREN**
*At 8/3 Vth Cross Street, 13th Main Road, Vijayanagar, Velachery, Chennai - 600 042.*
*Contact*
***9171950340***
***8056103724***

---

**Rent/lease**
Hotel/Gudon Mess/Office House for Rent/Lease
*Contact*
***7867982030***
***9600456182***

---

**Commercial Space for Rent**
850 Square feet for 27,000/- @ ground floor
*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*
2 L as advance
**CONTACT**
**7305837388**

---

**Commercial Space for Rent**
650 Square feet for 23,000/- @ first floor
*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*
6 month rent as advance
**CONTACT**
**7305837388**

---

**WANTED**
*Tele Callers*
**CONTACT**
**7305837388**

---

**DESIGNING**
Tamil & English DTP designing works
Rs. 750/- only
*Contact*
**7305837388**

---

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

---

**WOMAN'S WELLNESS YOGA CENTRE**
**Contact : 9444 122 922**

**TREATMENTS FOR**

- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு & குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால், ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் & தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க & அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

# வேளச்சேரி ரயில் நிலையத்தில் தீவிர சோதனைக்கு பின் அனுமதி...



குடியரசு தினத்தையொட்டி, வேளச்சேரி ரயில் நிலையத்தில் தீவிர சோதனைக்கு பின், பயணியர் அனுமதிக்கப்பட்டனர்.

நாடு முழுவதும், 73வது குடியரசு தினம் ஜனவரி 26ஆம் தேதி புதன் கிழமை அன்று கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு, சென்னையில் முக்கிய ரயில் நிலையங்களில் ஒன்றான வேளச்சேரி ரயில் நிலையத்தில் போலீசார் சோதனையை தீவிரப்படுத்தி உள்ளனர். செவ்வாய் கிழமை முதல், பயணியரை மெட்டல் டிடெக்டர் கொண்டு சோதனை செய்து, ரயில் நிலையத்திற்குள் அனுமதித்தனர். பக்கவாட்டு தண்டவாளம் வழியாக ரயில் நிலையத்திற்குள் நுழையும் பகுதி மூடப்பட்டது. அதையும் மீறி சென்றவர்களை, போலீசார் மறித்து சோதனை செய்து அனுப்பினர்.



# பாட்டி வைத்தியம்

பல் வலி குணமாக:

வேப்பிலையை நன்றாக சுத்தம் செய்துவிட்டு நல்ல தண்ணீரில் கொதிக்க வைத்து, வெதுவெதுப்பாக எடுத்து இரவு தினமும் வாய்க் கொப்பளித்து வந்தால் பல்வலி வராது. பல் சம்பந்தப்பட்ட நோய்கள் குணமாகும்.

குடல்புண் குணமாக

தினமும் ஒரு டம்ளர் திராட்சை பழச்சாறு குடித்து வந்தால் குடல் புண் குணமாகும். அகத்திக் கீரையை தினமும் உணவில் சேர்த்தால் குடல் புண் குணமாகும். அம்மான் பச்சரிசிக் கீரையுடன் மஞ்சள், ஓமம் இரண்டையும் சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் குடல் புண் குணமாகும்.



## இரா. இளங்குமரனார் (R. Elangumaranar)
## பிறந்த தினம் இன்று - ஜனவரி 30, 1927

புலவர் இரா. இளங்குமரனார் சனவரி 30, 1927ஆம் ஆண்டு பிறந்தார். இவர் ஓர் தமிழ் அறிஞர் ஆவர். பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய இவர், பின்னர் நூலாசிரியர், பாவலர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர், இதழாசிரியர், உரையாளர் எனப் பல பணிகளையும் செய்துள்ளார்.

இளங்குமரானார் திருநெல்வேலி மாவட்டம் வாழவந்தாள்புரம் என்னும் சிற்றூரில் பிறந்தார். அவரின் தந்தை படிக்கராமர், தாய் வாழவந்தம்மையார் ஆவார். 1946ல் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். பின்னர்த் தனியே தமிழ் கற்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் வழியாக 1951ல் புலவர் தேர்வில் முதல் வகுப்பில் வெற்றி பெற்றார். பள்ளிப்பருவத்தில் சொற்பொழிவாற்றும் திறனும் பாடலியற்றும் திறனும் பெற்றிருந்த இவர் இயற்றிய குண்டலகேசி என்னும் காவியம் 1958ல் மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்தில் அரங்கேற்றப்பட்டது.

திருக்குறள் கட்டுரைத் தொகுப்பு என்னும் இவரது நூலை 1963-ஆம் ஆண்டு நேரு வெளியிட்டார். சங்க இலக்கிய வரிசையில் புறநானூறு என்னும் இவரது நூலை 2003-ஆம் ஆண்டு அப்துல் கலாம் வெளியிட்டார்.

நல்லாசிரியர் விருது, செந்தமிழ் அந்தனர் பட்டம், தமிழக அரசின் திரு.விக விருது, திருக்குறள் செம்மல் விருது, திருச்சி தமிழ் சங்க விருது, குன்றக்குடி அடிகளார் வழங்கிய குறள் ஞாயிறு விருது, சென்னை கம்பன் கலகம் சார்பில் கம்பர் விருது போன்றவை தமிழக அரசு இவர்தம் தமிழ்ப் பணியை மதித்துப் பல சிறப்புப் பரிசில்களையும், விருதுகளையும் வழங்கியுள்ளது.

## ஆன்மீக தகவல்

### நல்ல இல்லத்திற்கு சில ஆன்மீக குறிப்புகள்!

வீட்டில் அமைதி, செல்வம், இன்பம் மற்றும் அனைத்து வகையான நல்ல விஷயங்கள் நிலைக்க நாம் இந்த ஆன்மீக குறிப்புகளை பின்பற்றுவது சாலச்சிறந்தது

வீட்டில் நெல்லி மரம் இருந்தால் லக்ஷ்மி கடாக்ஷம் பெருகும். விஷ்ணுவின் அம்சமாக நெல்லிமரம் திகழ்வதால் நெல்லி மரத்தில் மகாலக்ஷ்மி வாசம் செய்கிறாள். நெல்லிக்கனிக்கு ஹரிபலம் என்ற பெயரும் உண்டு. லட்சுமி குபேரருக்கு உரிய மரமாகவும் திகழ்கிறது நெல்லி. நெல்லிமரம் இருக்கும் வீட்டில் தெய்வீக அருள் நிறைந்திருக்கும். எவ்வித தீய சக்திகளும் அணுகமுடியாது. நெல்லிமரத்தடியில் கிடைக்கும் தண்ணீர் உவர் தன்மையில்லாமல் மிகவும் சுவையாக இருக்கும்.

சுமங்கலிகள், பூரண கும்பம், மஞ்சள், குங்குமம், திருமண், சூர்ணம், கோலம், சந்தனம், வாழை, மாவிலைத் தோரணம், வெற்றிலை, திருவிளக்கு, யானை, பசு, கண்ணாடி, உள்ளங்கை, தீபம் இவை அனைத்தும் லக்ஷ்மிக்கு மிகவும் பிடித்தவை.

தினசரி துளசி மாடத்திற்கு விளக்கேற்றி மும்முறை வலம் வர வேண்டும். சங்கு, நெல்லிக்காய், பசு சாணம், கோஜலம், தாமரைப் பூக்கள், சுத்தமான ஆடைகள் வீட்டில் இருப்பது சுபம்.

பசுக்களுக்கு ஒரு பழம் வாங்கிக் கொடுத்தாலே கோடி புண்ணியம் தேடி வரும் எனும்போது அவற்றுக்கு தீவனங்கள் வாங்கி தந்து போஷித்தால் பசுக்களிடம் குபேரன் குடி கொண்டிருக்கிறான் கோமாதா பூஜை குபேர பூஜைக்கு சமம்.

காலை எழுந்தவுடன் தனது உள்ளங்கைகள், பசு, கோவில் கோபுரம், இறைவனின் திருவுருவப் படம் இவற்றை பார்ப்பது நல்லது.

தினசரி விளக்கேற்றுவது சிறப்பு. செவ்வாய் மற்றும் வெள்ளிகளில் 5 முகம் கொண்ட விளக்கேற்றுவது இன்னும் சிறப்பு. விளக்கை அமர்த்துதல் அல்லது மலையேற்றுதல் என்று தான் சொல்லவேண்டும். அணைப்பது என்ற வார்த்தை சொல்லகூடாது. அது அமங்கலச் சொல்லாகும்.

# இந்த வார ராசிபலன்

### மேஷம்




இந்த வாரம் நீங்கள் ஏதேனும் முதலீடு செய்ய வேண்டும் என்றால், முதலில் யதார்த்தத்தை மதிப்பீடு செய்து பின்னர் மட்டுமே முதலீடு செய்யுங்கள். அது உங்களுக்கு மிகவும் நல்லது.

### துலாம்



இந்த வாரம் உங்கள் நிதி நிலையை வலுப்படுத்துவதன் மூலம் பணத்தைப் பெற விரும்பினால் அனுபவம் உள்ள ஒருவர் ஆலோசனை பேரில் உங்கள் பணத்தை முதலீடு செய்வது நல்லது.

### ரிஷபம்



இந்த வாரம் தங்கள் ஆரோக்கியத்தில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும், குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள். எந்த வகையான தொற்றுநோய்களையும் சந்திக்க வேண்டியிருக்கும்.

### விருச்சிகம்



இந்த நேரம் உங்கள் ஆரோக்கியம் மிகவும் நன்றாக இருக்கும். ஏனெனில் இந்த நேரத்தில் நீங்கள் நேரம் கிடைக்கும் போது யோகா பயிற்சி செய்து கவனித்துக் கொள்வீர்கள்.

### மிதுனம்



இந்த வாரம் ஒரு நல்ல நிறுவனத்தில் சிறந்த சம்பளத்துடன் நல்ல வேலையை பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். எனவே கிடைக்கின்ற வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்

### தனுசு



இந்த வாரம் எதிர்மறை எண்ணங்கள் உங்கள் மனதில் ஆதிக்கம் செலுத்தும். இந்த எதிர்மறை கண்ணோட்டத்தால் பல நல்ல லாபகரமான வாய்ப்புகளை நீங்கள் இழக்க நேரிடும்.

### கடகம்



இந்த வாரம் பெரிய பதவி உயர்வு அல்லது ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். எனவே பணி இடத்தில் உங்கள் மூத்த அதிகாரிகள் உங்களை பாராட்டுவார்கள்.

### மகரம்



இந்த வாரம் நீங்கள் மனம் மற்றும் உடல் ரீதியாகவும் சோர்வாக இருக்கலாம். அத்தகைய சூழ்நிலையில், சிறிது ஓய்வு எடுப்பதன் மூலம், உங்கள் ஆற்றல் அளவை உயர்த்தி மேம்படுத்தும்.

### சிம்மம்



இந்த வாரம் உங்கள் உடல்நிலை வழக்கத்தை விட சிறப்பாக இருக்கும். நீங்கள் ஏதேனும் பழைய உடல்நிலை பிரச்சனையால் அவதிப்பட்டிருந்தால், அந்த பிரச்சனை குணமாகும்.

### கும்பம்



இந்த வாரம் ஒருவருடன் வாக்குவாதம் உங்கள் நல்ல குணத்தை கெடுக்கும். எனவே, உங்கள் மனநிலையை மாற்ற, பெரியவர்களிடம் அனுபவத்தை கற்றுக் கொள்வது மிகவும் நல்லது.

### கன்னி



இந்த வாரம் பல நல்ல வேலை வாய்ப்புகளைப் பெறுவீர்கள். வாரத்தின் நடுப்பகுதிக்குப் பிறகு வேலையில் மகத்தான வெற்றியைப் பெறுவதற்கான வாய்ப்புகளையும் பெறுவீர்கள்.

### மீனம்



இந்த வாரம் முழுவதும் கடினமாக உழைக்க வேண்டும். ஏனெனில் இந்த நேரத்தில், உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும் வாய்ப்புகளை நீங்கள் காண்பீர்கள்.

# Chutties Corner

## தனித்திறமை பகுதி





Yeddanapudi Jeyan
IV- Std
Hyderabad





## திருக்குறள்

30. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

Towards all that breathe, with seemly graciousness adorned they live;
And thus to virtue's sons the name of 'Anthanar' men give




படத்தில் உள்ள 6 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!




## வண்ணக்கோலம்





Vijaya Asupathi
Thirupur









# YOUNG ACHIEVER AWARD






This week Prajan received young Achiever award from our Express Velachery team.

Dr. V. Prajan S/O M. Venugopal / V. Deepa staying in chennai.

Prajan 9 year old student of VGN. Chinmaya vidyalaya he is a Multiple world record holder.

Kalam world record Fast reciting tamil devotional poet thiruppavai 30 verses within 3 minutes.

Fast reciting periodic table 118 element within 21.62 seconds.

Universal book of record Youngest kid to recite 1 to 50 square within 26.13 sec while solving 2×2 rubik cube.

Kalams multi talented kid 2021. Exectis kids acheiver award Champian book of record Talent show multi-talented award winner.











He awarded Champion of Champion in Vedic maths, won first prize in memory power competition, spot and win speech competition from childwood days he never say no to any of the competition he started participating in inter school and open talent shows since 3 year and started winning many medals, sheild, trophies and certificate.

Best Child Actor award. little scientist award and also Won many prizes in Geeta chanting, thiruppavai, sloka recitation, picture talk, Rhymes, quiz, story making olympaid, read a thon, incredible kid award, clay modelling, story telling, flower decoration, talent show, singing, art and craft, best out of waste, personal talent, fireless cooking, mono act, sports, rhymes, talent show, etc....














He exhibited his talent of dance in live shows. For all this achivement he got doctorate inthe field of Acheiver from International Anti Corruption and Human Rights council.

I would like to thank my father, mother, grandparents and my Principal mam Smt Latha Ganesan, VP sir shri Durai chandran and all my teacher who encouraged me and supported me for my success.



# Work speeds up on MRTS extension project between Velachery and St. Thomas Mount...

The long-delayed construction of the Mass Rapid Transit System (MRTS) extension project from Velachery to St. Thomas Mount station is racing ahead with the Southern Railway hopeful of completing it by July.

The project announced by then Chief Minister M. Karunanidhi has been caught in delays for over a decade because of issues relating to land acquisition.

With the Chennai Metropolitan Development Authority (CMDA) finally handing over land in the final stretch in January 2021, the Southern Railway started construction to link the elevated stretch near the St. Thomas Mount railway station. The project will have a multi-modal transport facility of suburban trains and Metro services.



B. Guganesan, Chief Public Relations Officer, Southern Railway, said land acquisition was the only major hurdle for the project and the other work, including the building of two stations at Adambakkam and Puzhithivakkam, cabin modification at Velachery station and a majority of track line installation, had all been completed. A1.5-km stretch between Adambakkam and St. Thomas Mount was the problematic portion.

In the stretch, 80% of foundation and 60% of substructure work to construct elevated tracks have been completed. Elevated track construction work will commence shortly after the last two piers are built, he added.

The Southern Railway is pinning its hopes on attracting more commuters in the MRTS section with the linking of the Velachery and St. Thomas Mount stations. For the large residential population in and around Adambakkam and Puzhuthivakkam, the MRTS service will be a boon, especially since there was no other dependable public transport in the area.

The extension project will cover several residential localities in south Chennai, including Madipakkam, Ullagaram-Puzhithivakkam, west Velachery, Adambakkam, Nanganallur, Vanuvampet and Pazhavanthangal.

Even as residents in Velachery welcome the extension of the MRTS, they want some of train services originating from the Velachery railway station.

# ஸ்ரீசிவா விஷ்ணு ஆலயத்தில் 45 நாட்களாக நடைபெற்ற உத்சவத்தின் சிறப்புகள்...

கண்டோம் கண்டோம் கண்ணுக்கு இனியன கண்டோம். களித்தோம் பரவசம் கொண்டோம்.

நமது விஜய நகரில் சிவா விஷ்ணு கோவிலில் அமைந்துள்ள ஸ்ரீ கோதண்ட ராமர் ஸன்னதியில் மார்கழி மாத உத்சவங்கள் ஹனுமன் ஜெயந்தி கூடாரவல்லி, ஆண்டாள் திருக்கல்யாணம், வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல், பகல்பத்து இராபத்து நம்மாழ்வார் மோட்சம்









இந்த உத்சவங்களுடன் ஒரு பக்கம் வில்லும் ஒரு பக்கம் அம்பும் ஏந்தி கோதண்டராமராக வீற்றிருந்த நம் பெருமான் சக்ரவர்த்தி இராமனாக, வெண்ணெய் தாழி கிருஷ்ணனாக, பரமபதவாசனாக, திருமாலிருஞ் சோலை கள்ளழகராக, திருமலை ஸ்ரீனிவாசனாக, திருக்கண்ணபுரம் சௌரிராஜனாக, கோவர்த்தன கிரிதரனாக, காளிங்க நர்த்தன கிருஷ்ணனாக, அலங்கார பீஷ்மர்கள் சக்ரவர்த்திகள் கை வண்ணத்தில் உருமாறி நமக்கு காட்சி தரும்போது அதை காண நமக்கு ஆயிரம் கண்கள் வேண்டும் என்ற நிலையில் சேவை புரிந்தார்.

இந்த அனைத்து அலங்காரம் செய்து கொள்ள இராமர் வளைந்து கொடுத்தார். இப்படி எல்லாம் நம்மை மகிழ்வித்து நல் ஆசிகளும் செய்து வருகிறார்.

நாம் அவர் மீது அளவற்ற பக்தியும் உடல் பொருள் கொண்டு தொண்டும் செய்வதாலேயே மனம் பூரித்து நமக்கு அழகாக காட்சி தந்து பரிபூரண அனுக்கிரகம் செய்து வருகிறார். நாம் அவர்களுக்கு தொடர்ந்து தொண்டு செய்வோம். சரணாகதி அடைவோம்.

நாற்பத்தைந்து நாட்களாக நடைபெற்ற இந்த உத்சவம் சிறப்பாக நிறைவு பெற்றது. ஆன்மீக எண்ணம் பற்று கொண்ட பக்தர்களால் தான் இவ்வளவு சிறப்பாக நடந்து முடிந்தது.





# குடியரசு தின விழா நிகழ்ச்சியில் தூய்மை பணியாளருக்கு கவுரவம்...



வேளச்சேரி, முடிச்சூர் பகுதிகளில் நடந்த குடியரசு தின விழாவில், தூய்மை பணியாளர்கள் தேசிய கொடி -யேற்றி வைத்தனர். இதன் வாயிலாக, அவர்கள் கவுரவிக்கப் -பட்டனர்.

வேளச்சேரி, டான்சி நகர் குடியிருப்போர் நலச்சங்கம் சார்பில், ஜனவரி 26ஆம் தேதி புதன் கிழமை அன்று நடந்த குடியரசு தின விழாவில், மாநகராட்சி தூய்மை பணியாளர் ஒருவர் தேசிய கொடியேற்றி வைத்தார். நலச்சங்கத்தினரின் நடவடிக்கையை, மாநகராட்சி அதிகாரிகள் பாராட்டினர்.

அதே போல், முடிச்சூரில் நடந்த குடியரசு தின விழாவில், அதே ஊராட்சியில் 20 ஆண்டுகளாக பணிபுரியும், பெண் தூய்மை பணியாளர், முருகம்மாள் தேசிய கொடி -யேற்றி வைத்தார். அவரை, அப்பகுதி மக்கள் கவுரவித்தனர்.

## சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்





| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | விலை 1 லிட்டர் |
| ₹ 101.40 | ₹ 91.43 |

## சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்

| | 22 கேரட் | 24 கேரட் |
|---|---|---|
| தங்கம் விலை - | 1 கிராம் ₹ 4,533 | 1 கிராம் ₹ 4,945 |
| | 8 கிராம் ₹ 36,264 | 8 கிராம் ₹ 39,560 |
| வெள்ளி விலை - | 1 கிராம் ₹ 65.50 | |
| | 1 கிலோ ₹ 65,500 | |

# Entertainment Corner

## எக்ஸ்பிரஸ் ஜோக்ஸ்..........



பெண் : ஹலோ இது கஸ்டமர் கேர் தானே?
கஸ்டமர் கேர்: ஆமாம் சொல்லுங்க மேடம்
பெண் : என் அஞ்சு வயசு பையன் சிம் கார்டு ஐ விழுங்கிட்டான்.
கஸ்டமர் கேர்: அப்படினா டாக்டர் கிட்ட கூட்டிகிட்டு போங்க மேடம்
பெண் : இல்லை அதுல 95 பைசா பேலன்ஸ் இருந்துச்சி. அவன் பேசும்போது காசு போகுமா சார்?
கஸ்டமர் கேர்: ?????

******

தோழி 1: கல்யாணமாகி 25 வருஷத்துல ஒரே ஒரு தடவைதான் உன் கணவரோட சண்டை போட்டீயா.. ஆச்சரியமா இருக்கே..?
தோழி 2: ஆமா...அந்த சண்டையில அவர் வீட்டை விட்டுப் போனவர்தான், 25 வருஷமா திரும்பியே வரல...

******

### சென்ற வார இணைச் சொற்களுக்கான விடைகள்

**அந்தம்**

மரணம் விகுதி முடிவு இறுதி

### சென்ற வார குறுக்கெழுத்து புதிருக்கான விடைகள்

**இடமிருந்து வலம்:** 1. அறிவிப்பு 3. அரும்பு 14. மெட்டி 15. சலிப்பு 11. இறால் 13. சித்திரம்.

**வலமிருந்து இடம்:** 5. படிப்பு 6. எழுத்தாளர் 8. கராத்தே 10. ஆப்பிரிக்கா 12. வினா

**மேலிருந்து கீழ்:** 1. அண்டார்டிகா 2. விருந்தாளி 3. அம்பு 14. தொழுவம் 9. பிரேசில் 10. ஆஸ்திரேலியா 11. இரும்பு

**கீழிருந்து மேல்:** 7. ராட்டினம் 12. விளக்கு 14. மெரினா 16. நீச்சல்

### சென்ற வார சொல் விளையாட்டிற்கான விடைகள்

1. சிகப்பு 2. காசி 3. சிரி 4. தனம் 5. கானம் 6. காகம் 7. கனம் 8. காப்பு 9. கரி 10. சினம்

### சென்ற வார விடுகதை விளையாட்டிற்கான விடைகள்

1. பட்டுத்துணி 2. புற்கள் 3. அகப்பை 4. சூரியன் 5. நுங்கு

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெய்ல் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.


| | |
|---|---|
| Publisher | : R. Rajesh |
| Editor | : Saranya Rajesh |
| Designer | : S. Aswini |
| Journalist | : P. Praveen |
| Marketing Executive | : C. Karthikeyan |

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
*Weekly - News Paper*
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
*Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm*
*Saturday 9.30 am to 12.30 pm*
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com



**DISCLAIMER**

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.


## சொல் விளையாட்டு

| | | |
|---|---|---|
| ம | கா | பா |
| ர | த | யு |
| த | க | ம் |

கட்டத்தில் உள்ள எழுத்துக்களில் 10 வார்த்தைகளை கண்டுபிடியுங்கள்.

**அறுசுவை சமையல்**

## இனிப்பான ராகி பணியாரம்

தேவையான பொருட்கள்:

- ராகி மாவு - 1 கப்
- சர்க்கரை - 1 கப்
- துருவிய தேங்காய் - 1/4 கப்
- பால் - 1 கப்
- சோடா உப்பு - 1/4 டீஸ்பூன்
- ஏலக்காய் பொடி - 1 சிட்டிகை
- நல்லெண்ணெய் - தேவையான அளவு

செய்முறை:

❖ முதலில் ஒரு பௌலில் ராகி மாவு, சர்க்கரை, சோடா உப்பு, ஏலக்காய் பொடி ஆகியவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

❖ பின்னர் அதில் தேங்காய் மற்றும் பால் சேர்த்து, கட்டி சேராதவாறு நன்கு கலந்து, 1 மணிநேரம் ஊற வைக்க வேண்டும்.

❖ பின்பு பணியாரக்கல்லை அடுப்பில் வைத்து சூடேற்ற வேண்டும்.

❖ பணியார கல்லானது சூடானதும், அதில் சிறிது நல்லெண்ணெய் ஊற்றி, பின் கலந்து வைத்துள்ள பணியார மாவை குழியினுள் ஊற்றி, பணியாரங்களாக சுட்டு எடுக்க வேண்டும்.

❖ சுவையான ராகி பணியாரம் ரெடி.

## விடுகதை விளையாட்டு

1. உலகுக்கெல்லாம் ஒரே துப்பட்டி - அது என்ன?
2. உள்ளே இருந்தால் ஓடித் திரிவான். வெளியில் வந்தால் விரைவில் மடிவான் - அது என்ன?
3. எண்ணும் முள்ளும் இல்லாத கடிகாரம் எவராலும் பார்க்க இயலாத கடிகாரம் - அது என்ன?
4. ஏழை படுக்கும் பாய் எடுத்துச் சுருட்ட ஆள் இல்லை - அது என்ன?
5. ஒரு குருவிக்கு ஒரே கால் நாலு இறக்கை - அது என்ன?

அறிவியல் தகவல்

## தடுப்பூசியில் மூன்று நன்று?

கொரோனா வைரஸை எதிர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட தடுப்பூசிகளால், ஒமைக்ரான் என்ற திரிபு வைரசை எதிர்க்க முடியுமா? இந்தக் கேள்விக்கு, சற்று ஆறுதல் தரும் செய்திகள் வரத் துவங்கியுள்ளன.

பைசர் மற்றும் பயோன்டெக் ஆகியவற்றின் தடுப்பூசிகளைக் கொண்டு நடத்திய சோதனையின் முதற்கட்ட முடிவுகள் நம்பிக்கை தருவதாக கொரோனா சிகிச்சை வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

ஒமைக்ரான் வைரசின் அமைப்பை ஒத்திருக்கும் புரதங்களை ஆய்வகத்தில் வைத்து, அதற்கு தற்போதைய தடுப்பூசிகள் எப்படி போரிடுகின்றன என்று பைசர் மற்றும் பயோன்டெக் ஆகியவற்றின் விஞ்ஞானிகள் சோதித்தனர்.

ஒமைக்ரான் புரதத்திற்கு அந்த இரண்டு தடுப்பூசிகள் போதிய எதிர்ப்பைத் தெரிவித்திருப்பதும், ரத்த மாதிரிகளில், அதற்கான ஆன்டிபாடிகள் உருவாகி இருப்பதையும் விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.

இருந்தாலும், 2 முறை தடுப்பூசி போட்டவர்களின் உடலில், சிலருக்கு ஒமைக்ரானை எதிர்க்கும் திறன் இருக்காமல் போகக்கூடும் என்பதை ஆய்வின் வாயிலாக கணித்துள்ளனர்.

இத்தகைய குறையைப் போக்க, 3வது முறையாக பைசர் அல்லது பயோன்டெக்கின் தடுப்பூசிகளை, "பூஸ்டர் ஷாட்" போல போட்டுக் கொள்வது, ஒமைக்ரானிலிருந்து பலமடங்கு பாதுகாப்பைத் தரும் என இரு நிறுவனங்கள் ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

இதனால் தானோ என்னவோ, மேற்கத்திய நாடுகளில் பலவற்றில், பூஸ்டர் தடுப்பூசி போடுவது நல்லது என்ற முடிவுக்கு அரசுகள் வந்துள்ளன. விரைவில், சிறுவர்களுக்கான தடுப்பூசிகள் வந்து விடும். இத்துடன் பெரியவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியும் போட்டால் போதும். திடீர் கொரோனா தொற்றுகள் ஓங்குவதையும் அதன் திரிபு வைரஸ்கள் பரவுவதையும் வெகுவாக கட்டுப்படுத்த முடியும்.

## விவசாயம் காப்போம்

### கொத்தமல்லி சாகுபடி டிப்ஸ்

நிலத்தை நன்றாக உழுது, ஏக்கருக்கு, 10டன் தொழு உரம் இட்டு, மீண்டும் உழுத பின், மேட்டுப் பாத்திகள் அமைத்து, பாத்தியின் மீது விதைகளைப் போட்டு, மண்ணை மூட வேண்டும்.

ஏக்கருக்கு, 4 முதல், 5 கிலோ கொத்த மல்லி விதைகள் தேவைப்படும். கொத்த மல்லியை, சொட்டு நீர்ப் பாசன முறையிலும் பயிரிடலாம்.

மானாவாரியாக, கொத்தமல்லியை சாகுபடி செய்தால், ஏக்கருக்கு, 10 கிலோ விதைகள் தேவைப்படும்.

விதைப்பதற்கு முன், பொட்டாஷியம் - டை - ஹட்ரஜனை ஒரு லிட்டர் நீருக்கு, 10 கிராம் வீதம் கலந்து, விதைகளை, 16 மணி நேரம் ஊற வைத்து, விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

அதன்பின், விதைகளை வெயிலில் உலர்த்தி, அவற்றை இரண்டாக உடைத்து விதைக்க வேண்டும். அப்போது தான், விதைகள் முளைக்கும்.

நல்ல வடிகால் வசதியுள்ள நிலத்திலும், கார அமிலத் தன்மை, ஆறு முதல் எட்டு வரை இருக்கும் மண் வகையிலும், கொத்தமல்லியை சாகுபடி செய்யலாம்.

25 முதல், 28 டிகிரி வெப்பத்தில் வளரக்கூடிய இவற்றை, அனைத்துப் பருவத்திலும் சாகுபடி செய்யலாம்.

விதை விதைத்த, 10 முதல் 15 நாட்களுக்குள், கொத்தமல்லிச் செடிகள் முளைத்து விடும்.

விதைத்த 3ஆம் நாளும், அதன் பின், வாரம் ஒரு முறையும் செடிகளுக்கு நீர் பாய்ச்ச வேண்டும்.

விதைத்த 30வது நாள், தழைச் சத்து அடங்கிய மருந்தைத் தெளிக்க வேண்டும்.

கொத்தமல்லி சாகுபடியில், அசுவனிப்பூச்சி தென்பட்டால், மீதைல் டெமட்டான் மருந்தையும், பயிர்களில் வேர் அழுகல் நோய் தென்பட்டால், ட்ரைக்கோடர்மாவிரிடி, சூடோமோனஸ், அசோஸ்பைரில்லம் போன்ற மருத்துகளைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம்.

நோய் தாக்கிய செடிகளை, வேரோடு பிடுங்கி விடுவது நல்லது.

சாம்பல் நோயை கட்டுப்படுத்த, வேப்பெண்ணெய் மற்றும் கந்தகப் பொடி அல்லது பஞ்ச காவ்யா கரைசலையும் செடிகளுக்குத் தெளிக்கலாம்.

மேலும், 15 நாட்களுக்கு ஒரு முறை, களையெடுக்க வேண்டும்.

மொத்தத்தில், 30 முதல் 45 நாட்கள் வரை வளர்ந்த கொத்தமல்லிச் செடிகளிலிருந்து, ஏக்கருக்கு, 3 முதல், 4 டன் வரை கொத்தமல்லித் தழைகளையும், 90 நாட்கள் வரை வளர்ந்த செடிகளிலிருந்து, 200 முதல் 300 கிலோ வரை, கொத்தமல்லி விதைகளையும் அறுவடை செய்யலாம்.

சமையலில் கொத்தமல்லி முக்கிய அங்கம் வகிப்பதோடு, கொலஸ்ட்ரால் மற்றும் நீரழிவு நோய்க்கு சிறந்த மூலிகையாக திகழ்வதால், இதற்கு, டிமாண்ட் அதிகம். அதனால், மிக எளிதாக சந்தைகளில் கொத்தமல்லியை விற்பனை செய்து விடலாம்.




























Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, No.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH